**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| juk;:- 13 (2018) | INuhggpa tuyhW | Gs;spj;jpl;lk; |
|---|---|---|

## பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 1) 5 | 11) 3 | 21) 4 | 31) 2 |
| 2) 3 | 12) 5 | 22) 1 | 32) 2 |
| 3) 1 | 13) 3 | 23) 1 | 33) 1 |
| 4) 3 | 14) 5 | 24) 5 | 34) 3 |
| 5) 3 | 15) 2 | 25) 2 | 35) 3 |
| 6) 3 | 16) 1 | 26) 1 | 36) 3 |
| 7) 1 | 17) 1 | 27) 5 | 37) 3 |
| 8) 1 | 18) 5 | 28) 1 | 38) 1 |
| 9) 1 | 19) 4 | 29) 2 | 39) 4 |
| 10) 2 | 20) 3 | 30) 4 | 40) 2 |

agaram.lk

## பகுதி II

*01. படம் குறித்தல்*

*02. சமயம்*

- *இயற்கைப் படைப்புக்களுக்குச் சூரியன், சந்திரன், காற்று ஆகியவனவற்றிற்கு தெய்வ அந்தஸ்து கொடுக்கப்பட்டு வணக்க வழிபாடுகள் செய்யப்பட்டன. எனினும் தெய்வங்கள் பற்றிய பயம் கிரேக்கரிடம் குறைவாகவே காணப்பட்டது.*
- *தெய்வங்களுள் உலகத்துக்கு அதிபதியாகக் கருதப்பட்ட சியுஸ் (ஆகாயக்கடவுள்) தெய்வத்துக்கே முதலிடம் வழங்கப்பட்டது.*
- *கிரேக்கரது மதம் சுதந்திர சிந்தனைக்கு இடையூறாக இருக்கவில்லை.*
- *கிரேக்கரிடையே ஓரளவு சமய ஒற்றுமை காணப்பட்டது.*

**இலக்கியம்**

- *கிரேக்க இலக்கியம் பல அங்கங்களை கொண்டது.*
- *கவிதை (பின்டார், செபோ) உரைநடை இலக்கியங்கள் காணப்பட்டமை.*
- *வீரகாவியம் - ஹோமரின் இலியட், ஒடிசி*

**மெய்யியல்**

- ஆரம்ப மெய்யியலாளர்களாக மிலேட்டஸ் நகரில் இருந்த தேலிஸ், அலெக்சி மென்டர, அனெக்சிமீனிஸ் என்போரைக் குறிப்பிடலாம்.
- சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில் என்போர் சிறந்த தத்துவ ஞானிகளாக விளங்கினார்

03. 1) ஜேர்மனி

2) மார்டின் லூதர், ஜோன் கல்வின், உல்ரிச் சுவிங்ளி

3) 1. ஜோன் ரெட்சல் பாவ மன்னிப்புப் பத்திரங்களைப் பகிரங்கமாக விற்பனை செய்தமை. பேர்கஸ் வங்கியில் பகிரங்கமாக விற்கப்பட்டன. ரெட்சல் உண்டியலில் பணம் விழுந்த சத்தம் கேட்டவுடன் பாவமன்னிப்புக் கிடைத்துவிடும் என்றான்.

2. திருச்சபை நிதி சேகரித்த முறையையே மாட்டின் லூதர் மக்கள் முன்வெளிப்படுத்தினார்.

4) சமயம்

- திருச்சபையில் காணப்பட்ட ஊழல்கள்
- பாப்பரசர்களின் சுகபோக வாழ்வு
- திருச்சபை பதவிகளை ஏலம் விட்டமை. வரி அதிகரித்தமை.

அரசியல்

- ஐரோப்பாவிலே தேசிய அரசுகள் எழுச்சி பெற்றமை.
- பாப்பரசர் பிரான்சின் செல்வாக்கிற்கு உட்பட்டமை.
- உரோமை விட்டு அவிக்னோனில் எழுபது வருடங்கள் (கி.பி 1205-1378) வாழ்ந்தமை.
- இங்கிலாந்திலும் ஜேர்மனியிலும் எதிர்ப்புக்கள் ஏற்பட்டமை.

பொருளாதாரம்

- திருச்சபையிடம் பெரும் செல்வம் தேங்கிக் கிடந்தது.
- அனைத்து நாடுகளினதும் பெரும்பாலான நிலங்கள் திருச்சபைக்குச் சொந்தமாக இருந்தமை.
- வர்த்தகர்கள் திருச்சபையின் வரிவிதிப்புத் தமது இலாபமீட்டலுக்குத் தடையாக இருப்பதாக எதிர்த்தனர்.

04. 1) இங்கிலாந்து

2)
- வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சியுற்றதால் மூலதனமுடைய செல்வந்தர்கள் தோன்றுதல்.
- பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தல்.
- மூலப்பொருட்கள் இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்தமை.
- விஞ்ஞான அறிவு வளர்ச்சியுற்றிருத்தல்.

3)
- பறக்கும் நூணாழி (Flying shuttle)
- நூல் நூற்கும் ஜெனி (Spinning Jenny)
- நீர்ச் சட்டம் (Water ftame)
- விசைத்தறி

agaram.lk

4) • குடிசைக் கைத்தொழிலுக்குப் பதிலாகத் தொழிற்சாலைக் கைத்தொழில் தோன்றுதல்.
- பாரிய கைத்தொழில் ஆரம்பமாதல், உற்பத்தி பெருகுதல்.
- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்திற்குப் பதிலாகக் கைத்தொழிலையும், வர்த்தகத்தையும் மையமாகக் கொண்ட பொருளாதாரம் உருவாகுதல்.
- போக்குவரத்து முன்னேற்றமடைதல்.
- தொழிலாளர் வகுப்பு தோன்றுதல்.

05. • திறமையானோருக்குப் பதவிகள் வழங்குதல்.
- சர்வாதிகாரியாக இருந்தபோதிலும் அரசியல் அமைப்பைக் குடிமக்களின் ஒப்புதலுக்கு முன் வைத்து, அவர்களது சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- ஸ்தல ஸ்தாபனங்களின் ஆட்சி முறையை சீர்திருத்தி அமைத்தல்.
- கல்வித்துறையில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல்.
  - முக்கிய நகரங்களில் உயர்நிலைப் பள்ளிகள் நிறுவப்படல்.
  - பாரிசு நகரில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்படல்.
  - பல்கலைக்கழகங்கள் மூலம் கல்வி வளர்ச்சியடைய ஆவனசெய்தல்.
  - பெண் கல்விக்கு ஆதரவு அளித்தல்.
- பாப்பரசருடன் உடன்படிக்கை செய்து கொள்ளல்.
- நெப்போலியனின் சட்டத் தொகுப்பை அறிமுகம் செய்தல்.
- வங்கிகள் நிறுவப்படல்
- பரிஸ் நகரை முறையாக நிர்மாணித்தல்.
- போக்குவரத்தை முன்னேற்றுதல்.

agaram.lk

06. 1) ஜேர்மன் அரசர்களின் ஆட்சியின் போது மகாசபை (மெக்னும் கொன்சிலியூம்) எனும் சிரேஷ்டர்களின் சபையை மையமாகக் கொண்டே இங்கிலாந்தின் பாராளுமன்ற ஆரம்பக் கட்டமாக விளங்கியது.

1215 ஆம் ஆண்டு மூன்றாம் ஜோன் மன்னனால் மகா பட்டயம் எனப்பட்ட மக்னா காட்டா கைச்சத்திடப்பட்டமை பாராளுமன்ற அதிகார வளர்ச்சியின் ஆரம்பக் கட்டமாக விளங்கியது.

மக்னா காட்டா கைச்சாத்திட்ட பின்னர், அதன் எல்லைக்குள்ளிருந்து தத்தமது அதிகாரத்தைக் கூட்டிக் கொள்ளும் நோக்குடன் செயற்பட்டமை அரசருக்கும், பாராளுமன்றத்திற்குமிடையே சச்சரவை ஏற்படுத்தியது.

அரசர்கள் பலவீனமடைந்த சந்தர்ப்பங்களிலும், அவர்களுக்கு மேலதிகப் பணம் தேவைப்பட்ட சந்தர்ப்பங்களிலும், சிங்காசனம் தொடர்பாகப் போட்டிகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலும் பாராளுமன்றத்தின் அதிகாரம் பெருகியதைக் காணக்கூடியதாக இருந்தமை.

1509 தொடக்கம் 1547 வரை ஆட்சி செய்த 8ஆம் ஹென்றி மன்னன் உரோமன் கத்தோலிக்க மதத்திலிருந்து விலகிச் செல்லும் பொருட்டுப் பாராளுமனன்றத்தைப் பயன்படுத்திய சந்தர்ப்பமானது இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் அதிகார வளர்ச்சியினை வெளிப்படுத்தம் முக்கிய கூட்டமாகக் காணப்படுகின்றது.

2) 1688 புகழ் மிக்க புரட்சி

பாராளுமன்றத்தின் விருப்பப்படி விலியம், மேரி என்போர் இங்கிலாந்தின் அரசனாகவும், அரசியாகவும் நியமிக்கப்பட்டதுடன் அரசனை நியமிக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு கிடைத்தமை.

கத்தோலிக்க சமயத்தைத் தழுவிய எவருக்குத் இங்கிலாந்தின் சிங்காசனம் உரிமையாவதில்லை எனத் தீர்மானிக்கப்படல்.

அரசனின் தலையீடு இன்றி மக்கள் பரிதிநிதிகளைத் தெரிவு செய்யும் உரிமை, பாராளுமன்றத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமை, பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசன் வரி வசூலிக்க முடியாது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசன் நிரந்தரப் படை வைத்திருக்க முடியாது போன்றவை சட்டமாக்கப்படல்.

3) பிரதிநிதித்துவ முறை

இங்கிலாந்தின் பாராளுமன்ற வளர்ச்சியின் சிறப்பம்சமாகக் கருதக்கூடிய மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சபையாக அது வளர்ச்சியடைந்து.

1832 ஆம் ஆண்டளவில் வாக்குரிமை, தேர்தல் தொகுதி முறை என்பன சிக்கல்கள் நிறைந்ததாக காணப்பட்டது.

1832 ஆம் ஆண்டு தொழிலாளருக்கு வாக்குரிமை கிடைக்கும் வகையில் வாக்குரிமை பரவலாக்கப்பட்டது.

1872 ஆம் ஆண்டு இரகசிய வாக்களிப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டது.

1918 ஆம் ஆண்டு 30 வயதினை நிறைவு செய்த அனைவருக்கும் வாக்குரிமை கிடைத்தது.

இவ்வாறு இங்கிலாந்து பாராளுமன்றத்தின் பிரதிநிதித்துவ முறை வளர்ச்சியடைந்தது.

4) மந்திரி சபை

அரசனது அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் பாராளுமன்றம் நடவடிக்கை எடுத்தல்.

ஹனோவர் வம்ச ஆரம்ப அரசர்கள் இருவராலும் ஆங்கிலம் பேசமுடியாதிருந்தமை.

அமைச்சரவை வளர்ச்சியுடன் அரசன் அமைச்சரவையின் தலைமை வகிக்கும் நிலை கைவிடப்படல்.

இங்கிலாந்தின் முதலாவது பிரதம மந்திரியாகக் கருதப்படுபவர் ரொபட் வால்போல் என்பவராவர்.

அமைச்சரவைக்கு ஒரே கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர்களைத் தெரிவு செய்தலும் அரசியல் கட்சி வளர்ச்சியுடனும், அமைச்சரவை (தெரிவு செய்யும் முறை) வளர்ச்சியுடனும் ஆரம்பமாதல்.

07. 1) நெப்போலியின் பொனாபாட் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் ஐரோப்பியத் தலைவர்கள் வியன்னாவில் ஒன்று கூடி நடாத்திய மாநாடே வியன்னா மாநாடாகும்.

இம்மாநாட்டில் தீர்க்கப்பட வேண்டிருந்த பிரதான பிரச்சினை.

- நெப்போலியனால் சிதைக்கப்பட்ட ஐரோப்பிய வரைபடத்தை சீரமைத்தல்.
- பிரான்சுப் புரட்சிக்கு முன் இருந்த அரசாட்சி மற்றும் நாட்டின் எல்லைகளை மீண்டும் ஏற்படுத்தல்.
- அதிகார சமநிலையை ஏற்படுத்தல்
- தேசிய வாதம், லிபரல் வாதம் தொடர்பாக பின்பற்ற வேண்டிய கொள்கைகள்.

agaram.lk

2) பிரான்ஸ் - புரட்சிக்கு முன்னிருந்த நிலைக்கு எல்லைகளை சுருக்குதல். பூர்பன் அரச வம்சத்தை அரசாட்சியில் அமர்த்துதல்.

ஏனைய ஐரோப்பிய நாடுகள் பற்றியும் முடிவு எடுக்கப்பட்டன.

- ஜேர்மனி – 363 அரசுகள் 39 ஆக குறைத்தல்.
- ஆஸ்திரியா – லொம்பாடி, வெனிசியாவைப் பெற்றுக் கொள்ளல்.

பிரஷ்யா – ஜேர்மனியின் சில பகுதிகளைக் கைப்பற்றி விசாலமாக்குதல்.

இத்தாலி – லொம்பாடி, வெனிசியா, பீட்மண்ட், சாடினியா, பர்மா, மொடானா, டஸ்கனி, நேப்ல்ஸ், சிசிலி, பாப்பரசரின் அரசு என இத்தாலிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் பழைய அரசவம்சத்தினர் ஆட்சியில் அமர்த்தப்பட்டனர்.

தேசிய வாதம், லிபரல் கருத்துக்களை கட்டுப்படுத்த முனைந்தமை (மெடனிக் முறை) ஐரோப்பிய மாநாட்டு முறையினை நடைமுறைப்படுத்தல்.

08.

- பிஸ்மார்க் பின்பற்றிய கொள்கை "இரத்தமும் இரும்பும்" என அழைக்கப்பட்டமை.
- பிஸ்மார்க் 1861ல் பிரதமராகப் பதவியேற்றபோது "இன்றைய பெரும் பிரச்சினைகளைப் பெரும்பாண்மை வாக்குகளாலும், பேச்சுக்களாலும் முடிவு செய்ய முடியாது ஆனால் இரத்தத்தாலும் இரும்பு இதயத்தாலும் தான் முடிவு செய்ய முடியும்." என பிஸ்மார்க் கூறினார்.
- பிரிஷியாவின் எதிரியான ஒசுத்திரியாவின் வலிமையைக் குறைப்பது. பிரான்ஸைத் தனிமைப்படுத்துவது ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் செயற்பட்டார்.
- பிஸ்மார்க் ஜனநாயக தாராள முற்போக்குக் கொள்கைகளுக்கு எதிரானவர். வலிமையே வெல்லும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.
- 1862 ஆம் ஆண்டு பிரஷ்யாவின் சான்சலர் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் லிபரல்வாதிகளின் அதிகாரத்தை வீழ்ச்சியுறச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- 1864 ஆம் ஆண்டு செலஸ்வீக் ஹோல்ஸ்டீன் மாகாணங்களை டென்மார்க்கிற்கு எதிராகப் போர் தொடுத்து கைப்பற்றியமை.
- 1866 ஆம் ஆண்டு ஏழுவார ஆஸ்திரிய பிரஷ்யப் போரில் வெற்றி பெற்று வடக்கு ஜெர்மனி கூட்டமைப்பு ஒன்றை அமைத்தார்.
- 1870 – 71 ல் பிரான்ஸைத் தனிமைப்படுத்தி பிரான்ஸ் - பிரஷ்ய யுத்தத்தில் வெற்றியடைந்தார். ஜேர்மனியை ஒன்றிணைக்கும் செயலை முடித்து ஜேர்மனியப் பேரரசை நிறுவினார்.

agaram.lk